மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை: திரு. A.S. அமீர்தீன், B.A., B.L.,L.L.M., D.J.J.J.Psy.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

(முழு கூடுதல் பொறுப்பு)

திருவள்ளுவராண்டு 2053, ஸ்ரீ சுபகிருது வருடம் தைத் திங்கள் 06 ஆம் நாள்

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ம் நாள் வெள்ளிக் கிழமை

**அசல் வழக்கு எண்.97/2021**

(CNR No.TNTV06-000195-2021)

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி முன்சிபி மன்னார்குடி தாலுக்கா, கண்டிதம்பேட்டை வடக்கு தெருவில் வசித்து வந்த தற்காலம் மன்னார்குடி நகரம், கதவு எண்.64/16, நியூ பைப்பாஸ் ரோடு என்ற முகவரியில் வசிக்கும் திருஞானம் குமாரர் கதிரவன், என்பவருக்காக அவரது முகவரான மன்னார்குடி தாலுக்கா, கண்டிதம்பேட்டை கிராமம் கதவு எண்.4/D கீழத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் இந்து விவசாய தொழில் செய்யும் ராமு குமாரர் 43 வயதுள்ள ராசேந்திரன்

... வாதி

/ எதிர்/

மன்னார்குடி தாலுக்கா, மன்னார்குடி முன்சிபி, கண்டிதம்பேட்டை கிராமம், கதவு எண்.2/67, வடக்கு தெரு என்ற முகவரியில் வசிக்கும் இந்து விவசாய தொழில் செய்யும் அமரநாததேவர் மகன் 74 வயதுள்ள தமிழரசன்

... பிரதிவாதி

எதிர்வாதியோ எதிர்வாதியின் அதிகாரம் பெற்ற நபரோ ஆட்களோ, இதன் கீழ் சொத்து விபர அட்டவணையில் கண்ட சொத்திற்குள் அத்துமீறி பிரவேசிக்கவோ வாதியின் அமைதியான அனுபவத்தை எந்த வகையிலும்தடை செய்யவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் மற்றும் தாவா செலவுத்தொகையை வாதிக்கு எதிர்வாதி செலுத்தி வைக்கவும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் : 05.10.2021

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 05.10.2021

இவ்வழக்கின் வழக்கெழு மூலம் 16.11.1986, 27.03.1993 மற்றும் 03.10.2021 ஆகிய தேதிகளில் சமூக நீதிமன்ற எல்லைக்குட்பட்ட மன்னார்குடி தாலுக்கா, திருப்பாலக்குடி வருவாய் கிராமம், கீழதிருப்பாலக்குடி கிராமத்தில் உற்பத்தி.

**நீதிமன்றக் கட்டண விவரம்**

வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு வாதியின் தோராயமான வழக்கு பொறுமானம் ரூ.1000/- இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பிரிவு 27(c)ன்படி செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் ரூ.30/- ஆகும்.

**<u>வழக்கு பொறுமான விபரம்</u>**

| | |
|---|---|
| நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்துக்கு வாதியின் பொறுத்து | ரூ.1,000/- |
| தமிழ்நாடு நீதிமன்ற கட்டணச்சட்டம் பிரிவு 27(c)ன்படி செலுத்தப்பட்டுள்ள நீதிமன்ற கட்டணம் | ரூ.30/- |

இவ்வழக்கு என் முன்பாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. J. ஜீவானந்தம் அவர்களும் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர்கள் M.இளஞ்சேரன் மற்றும் K. மஞ்சுளாஇளஞ்சேரன் ஆகியோர்களும் முன்னிலையான நிலையில், வாதியை அழைத்தும் வருகையில்லாததால் வாதியின் தவறுகைக்காக இவ்வழக்கு தள்ளுபடி செய்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவா.று வழங்கும்,

**<u>தீர்ப்பாணை</u>**

1. வாதியின் தவறுகைக்காக இவ்வழக்கு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத் தொகை பற்றி உத்தரவு இல்லை.

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

(Sd/- அமீர்தீன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி (மு.கூ. பொ).

## <u>சொத்து விபரம்</u>

மன்னார்குடி தாலுக்கா, 138 திருப்பாலக்குடி வருவாய் கிராமம், கீழதிருப்பாலக்குடி கிராமத்தில் உள்ள புல எண்.338/1, 338/2, இதற்கு புதிய புல எண்.338/1A, 338/1B, புல எண். 339/1, 339/2A இவை இரண்டிற்கும் புதிய புல எண். 339/1c. ஆகியவற்றில் பகுதியாக அடங்கி உள்ள 1 ஏக்கர் 53-1/3 செண்டு நஞ்சை நிலம் மற்றும் இதில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணற களம் உட்பட.

**நான்கு எல்லை** :

சு. சிதம்பரம் நிலத்திற்கு மேற்கு

சந்திரசேகரன் நிலத்திற்கு தெற்கு

சந்திரசேகரன் தெட்சிணாமூர்த்தி நிலத்திற்கும் வடக்கு

பன்னீர்செல்வம் நிலத்திற்கு கிழக்கு.

(Sd/- அமீர்தீன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி (மு.கூ. பொ).

# Valuation Slip

## IN THE COURT OF DISTRICT MUNSIF OF MANNARGUDI

## O.S.No.97/2021

கதிரவன்
அவருக்காக அவரது அதிகாரம்
பெற்ற முகவர் ராஜேந்திரன் ... வாதி

/ எதிர்/

தமிழரசன் ... பிரதிவாதி

| | | |
|---|---|---|
| Court fee section and sub section | : | Sec. 27(c), T.N.C.F. Act |
| Nature of Suit | : | Permanent Injunction |
| valuation of the Suit | : | Rs.1,000/- |
| Court Fees | : | Rs.30/- |

//By Order//

Head Clerk,
District Munsif Court,
Mannargudi.